திரு. டி. எல். சசிவர்ண தேவர் : இந்த வௌவால்களின் பெரும் பகுதி ஆலயங்களில் புகுந்து கொண்டிருக்கின்றன. அதனால் ஆலயங்களில் துர்நாற்றம் அடிக்கிறது. அவற்றை அங்கிருந்து அழிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : கோயில்களில் இருக்கிற சிப்பந்திகள் இப்போதே அவற்றை விரட்டி வருகின்றனர். ஆலயங்களைச் சுத்த மாக வைத்துக் கொள்ளவேண்டுமென்பது தான் அரசாங்கத்தின் கருத்தும்.

கனம் சபாநாயகர் : ஜீவகாருண்யம் குறுக்கே நிற்குமோ என்று சந்தேகம்.

வீடூர் நீர்த்தேக்கம்.

*77 கேள்வி—திரு. ஆ. தங்கவேலு : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வீடூர் நீர்த்தேக்கத்தில் எத்தனை தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள் ?

(இ) அத் தொழிலாளர்களில் சிலருக்குப் பஞ்சப்படி கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(உ) ஆமெனில், அதன் காரணம் என்ன ?

கனம் திரு. வெ. ராமையா : (அ) 15.

(இ) ஆம். அரசாங்கத்தைச் சேராத, வேலை நிதி ஊதியம் பெறும் தொழிலாளர்களில் ' (work charged establishment) மேஸ்திரியைத் தவிர மற்றத் தொழிலாளர்கள் யாருக்கும் அகவிலைப் படி பெறுவதற்கு உரிமையில்லை.

(உ) அரசாங்கத்தைச் சேராத, வேலை நிதி ஊதியம் பெறும் தொழிலாளர்கள், சம்பள விகிதங்களிலோ படிப்படியாகவோ சம்பளம் பெறுவதில்லை. அகவிலைப்படி முதலிய அனைத்தும் அடங்கிய குறிப்பிட்ட சம்பள வீதங்களே அவர்களுக்கு வழங்கப் படுகின்றன.

திரு. ஆ. தங்கவேலு : தலைவர் அவர்களே, வீடூர் நீர்த் தேக்கத்தில் பணியாற்றும் தொழிலாளர்கள் 60 ரூபாய் தான் சம்பளம் பெறுகிறார்கள். அவர்கள் அரசாங்கத்தில் தொடர்ந்து ஐந்தாறு ஆண்டுகளாகப் பணி புரிந்து வருகிறார்கள். இவ்வளவு குறைந்த ஊதியத்தை வைத்துக் கொண்டு அவர்களால் எப்படிக் காலம் தள்ள முடியும் ?

கனம் சபாநாயகர் : உபகேள்விகள் கேட்பதற்குப் பதிலாக ஒவ்வொருவரும் இப்படி நீண்ட பிரசங்கமாகச் செய்துகொண்டு போனால் எப்படிக் கேள்விகளை முடிக்க முடியும் ? கேள்வியாகப் போடுங்கள். பேசிக்கொண்டே போகக் கூடாது.

திரு. ஆ. தங்கவேலு : மேஸ்திரிகளைத் தவிர மற்ற தொழிலாளர்கள் யாரும் அகவிலைப்படி பெறுவதற்கு உரிமையில்லை என்றுர்கள். இருக்கக்கூடிய நிலையை உத்தேசித்து, அரசாங்கம் இதை மீண்டும் பரிசிலனை செய்து எல்லாத் தொழிலாளர்களுக்கும் அகவிலைப்படி வழங்க ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : வீடூர் நீர்த்தேக்கத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு மட்டும் இல்லை. இதே நிலையில் இருக்கும் மற்றர்களுடைய நிலைமையையும் கூட அரசாங்கம் பரிசிலனை செய்து கொண்டுதான் இருக்கிறது.

*** 78 கேள்வி—திரு. ஆ. தங்கவேலு :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வீடூர் நீர்த்தேக்கத்தின் கீழுள்ள வீடூர், சிறுவை ஆயக் கட்டுகளுக்கு 10 சதவிகிதம் அதிகப்படி வரி விதித்து 3 ஆண்டு களுக்குச் சேர்ந்து வரி கட்டும்படி நிர்ப்பந்தப்படுத்தப்படுவதை ஒட்டி, வீடூர் நீர்ப்பாசனக் குழுத்தலைவர் அவர்களால் 27—1—1966-ல் கனம் உணவு அமைச்சர் அவர்களிடம் மனு ஒன்று கொடுக்கப் பட்டதா ?

(இ) ஆமெனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

கனம் திரு. வெ. ராமையா : (அ) ஆம்.

(இ) அந்த வேண்டுகோளை அரசாங்கம் பரிசிலனை செய்தது. வீடூர் நீர்த்தேக்கத் திட்டத்தின் கீழ் உள்ள நிலங்களுக்கு, தமிழ் நாடு 1963-ம் ஆண்டு கூடுதல் நிலவரி கூடுதல் பாசனத் தீர்வைச் சட்டத்தின் கீழ், கூடுதல் நிலவரியும், கூடுதல் பாசனத் தீர்வையும் செலுத்துவதிலிருந்து விலக்களிப்பதென ஏற்கெனவே முடிவு செய்ததை விரைந்து செயல்படுத்துவதே போதுமானது என்று அரசாங்கம் கருதியது. மேற்படிச் சட்டம் வீடூர் நீர்த்தேக்கத் திட்டத்திற்குப் பொருந்துவதிலிருந்து விலக்களித்து அறிவிப்பு வெளியிடப்படும்வரை, மேற்படிச் சட்டத்தின் கீழ் கூடுதல் நிலவரியும், கூடுதல் பாசனத் தீர்வையும் வசூலிப்பதை நிறுத்தி வைக்கும்படி தென் ஆர்க்காடு மாவட்டக் கலெக்டர் கேட்டுக் கொள்ளப்பட்டார். வீடூர் நீர்த்தேக்கத் திட்டத்திற்கு மேற்படி சட்டத்திலிருந்து விலக்களித்து அரசாங்கம் இப்போது அறிவிப்பு ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, இந்த வீடூர் 9-00 a.m. நீர்த்தேக்கத்தின் கீழ் உள்ள ஆயக்கட்டில் பலன் அடைந்தவர்கள் தீர்வை கட்டுவதில் நியாயம் இருக்கிறது. ஆனால், பலன் அடை யாமலே இருக்கக்கூடியவர்களுக்கு, தண்ணீர் பாயாமல் உள்ள நிலங்களுக்குத் தீர்வையை நிறுத்தி வைப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னர்கள். இதுவரைக்கும் அப்படிப் பலன்